# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 48 — 1973 පෙබරවාරි 23 වැනි සිකුරාදා — 1973.02.23

48 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 179 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 201 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 201 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 202 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


*குறிப்பு.*—இலங்கைத் தேசியப்பிணி ஒழிப்பியக்க சட்டமூலமும் நிதி, இலங்கை அரச ஈட்டு வங்கி (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ந் திகதிய ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறை நிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

*வேலையாட்களுக்குச் சாப்பாடு வழங்கல்*

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு வேலையாட்களுக்குச் சாப்பாடு வழங்குவதற்கெனக் கேள்விப் பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

2. பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய கேள்வியாளர்கள் தினமும் 500 மத்தியானச் சாப்பாட்டுப் பொட்டணங்களேயும், சனிக்கிழமைகளில் 200 மத்தியானச் சாப்பாட்டுப் பொட்டணங்களையும் வழங்கச் சம்மதிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு சாப்பாட்டுப் பொட்டணத்திலும்—

12 அவுன்ஸ் சம்பா அரிசிச் சோறு இருத்தல் வேண்டும்.

2 கறிகள் இருத்தல் வேண்டும்—ஒவ்வொரு கறியின் எடை 4 அவுன்ஸ்.

1½ அவுன்ஸ் எடையுள்ள ஒரு மீன்கறியும், விசேடமாகத் தயாரித்த ஒரு கறிவகையும் இருத்தல் வேண்டும். விசேட தயாரிப்பு இரண்டு அவுன்ஸ் பொரித்த மீனுக அல்லது ஒரு முழு அவியல் முட்டையாக அல்லது ஒரு பொரித்த முட்டையாக இருத்தல் வேண்டும்.

½ அவுன்ஸ் சம்பல் அல்லது மிளகாயுடன் பொரித்த கருவாடு அல்லது பதம் செய்யப்பட்ட கருவாடு.

சாப்பாட்டுப் பொட்டணத்தைச் சுற்றியிருக்கும் பத்திரத்தின் எடை 2 அவுன்சுக்கு மேலாக இருத்தலாகாது.

4. ஒரு குறித்த நாளில் எத்தனை சாப்பாட்டுப் பொட்டணங்கள் தேவைப்படும் என்பதை அந்த நாளுக்கு முதல்நாள் பிற்பகல் 3.00 மணியளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளருக்கு அறிவிக்கப்படும். மத்தியானச் சாப்பாட்டுப் பொட்டணங்களை முற்பகல் 10.00 மணியளவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வழங்க வேண்டும்.

5. ஒவ்வொரு சாப்பாட்டுக்கும் ரூபா 1/- வீதம் கொடுக்கப்படும். தேவைப்படும் சாப்பாட்டின் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் மாற்றமடையும். வழங்கப்பட்ட சாப்பாடுகளுக்கான பணம் மாதாமாதம் கொடுக்கப்படும்.

6. சாப்பாடுகள் உருசியுள்ளனவாயும், சுத்தமாகவும் இருப்பதோடு மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.

7 மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கேற்ப சாப்பாடுகளை வழங்குவதற்கு உடன்படும் கேள்வியாளர்கள், அடையாளம் பொறித்த கேள்விப் பத்திரங்களை 1973 மார்ச் 07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கப்பற்றுறை ஆணையாளருக்குப் பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும்; அல்லது திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை உள்ளடக்கியிருக்கும் உறையின் இடது மேல் மூலையில் "கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு வேலையாட்களுக்குச் சாப்பாடு வழங்கல்" என்று எழுதப்படல் வேண்டும்.

வி. சி. பர்ணாந்து,
நிருவாகச் செயலாளர்,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1973 பெப்பிரவரி 08 ஆம் திகதி.

2-830—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நோத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

சீனன்குடாவிலுள்ள "பர்மா காம்ப்" வேலை நிலைய உண்டிச்சாலை

மேற்கூறிய உண்டிச்சாலையைக் குத்தகையில் கொடுப்பதற்கெனப் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1973.03.09 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை கப்பற்றுறை ஆணையாளர் ஏற்றுக் கொள்வார். இக் குத்தகையின் காலம் கப்பற்றுறை ஆணையாளர் நிட்சயிக்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்காகும்.

2. அவருடைய அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில், இணைப் பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் ரூபா 25 கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட பின்னர்தான் இப் படிவங்கள் வழங்கப்படும்.

3. 1973.03.07 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரப் படிவங்களுடன் கொடுக்கப்படும்.

2-907—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

செப்பனிடு கலத்துறையின் வடபகுதியிலுள்ள உண்டிச்சாலை

மேற்கூறிய உண்டிச்சாலை குத்தகையில் கொடுப்பதற்கெனப் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1973.03.09 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை கப்பற்றுறை ஆணையாளர் ஏற்றுக் கொள்வார். இக்குத்தகையின் காலம் கப்பற்றுறை ஆணையாளர் நிட்சயிக்கும் திக்தியிலிருந்து ஒரு வருடத்துக்காகும்.

2. அவருடைய அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவங்களில், இணைப் பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் ரூபா 25/- கட்டுப் பணமாகச் செலுத்தப்பட்ட பின்னர்தான் இப்படிவங்கள் வழங்கப்படும்.

3. 1973.03.07 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் கேள்விப்பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

4. குத்தகை சம்பந்தமான நிபந்தனைகள் கேள்விப் பத்திரப் படிவங்களுடன் கொடுக்கப்படும்.

2-933—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

பாவித்த 'லான்ட்றோவர்' (Land Rover) விற்பனை

லான்ட் றோவர் ஒன்றை வாங்குவதற்கும் அகற்றுவதற்கும் முத்திரை பொறித்து மூடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ந் தேதி பிற்பகல் 2.00 மணிவரை என்னல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களையும் இக்கேள்வி சம்பந்தமான நிபந்தனைகளையும் இத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகம்,
தேயிலைக் கட்டுப்பாட்டாளர்.

தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
கொழும்பு போட் லான்ட் கட்டிடம்,
அ. பெ. இலக்கம் 363,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ந் தேதி.

2-839—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

தாழை (வற்றகே), பாய், சணல் (ஹன) ஆகியவற்றோடு தொடர்பான கைத்தொழில்கட்குரிய வண்ணச் சாயங்கள் வழங்குவதற்குத் தயாரிப்பாளர்களிடமிருந்தும் தயாரிப்பாளர்களின் முகவர்களிடமிருந்தும் கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் 1973 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்விப்படிவங்கட்கும் சிறு கைத்தொழிற்றிணைக்களத்துக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம்—3/1—(4/25)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 பெப்புருவரி 12.

2-906—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### காணி ஆணையாளர் திணைக்களம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிடும் வேலைகள் செய்வதற்காக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களால் 1973.04.06 ம் திகதி பிற்பகல் 2.00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகைகள் |
|---|---|
| | ரூபா |
| I. யாழ்ப்பாண மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவில் கிணறு வெட்டுதல் ... ... | 2,000 |
| II. யாழ்ப்பாண மாவட்டத்தில் துணுக்காய் காரியாதிகாரி பிரிவிலுள்ள வவுனிக்குளம் பகுதி 6 இல் அமைந்துள்ள காணி அபிவிருத்தி மேற்பார்வையாளரின் விடுதி திருத்த வேலைகள் ... ... | 1,000 |

2. மேற்குறிப்பிட்ட தொகைக்கோ, அல்லது அதிற்கூடிய தொகைக்கோ நெடுஞ்சாலைப்பகுதி, நீர்ப்பாசனப் பகுதி அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் இக் கேள்விக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரி காணிக் கிளையிலிருந்து 1973 ம் ஆண்டு சித்திரை மாதம் 04 ம் திகதி பிற்பகல் 1.30 மணிவரை வழங்கப்படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது ஒப்பந்த பதிவு பற்றிய அத்தாட்சிப்பத்திரங்களை அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக செலுத்தப்பெற்ற ரூபா 25 க்குப் பெறுமதியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்தபின் செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம், பிணையாகச் செலுத்தும் வைப்புப் பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட சமர்ப்பணத்தைக் கொண்டே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப்பெற்ற தபால் உறையின் மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரம் பதியப்பட்ட தபாலில் அனுப்பாதுவிடின் யாழ்ப்பாண செயலகத்திலுள்ள அலு

வலக உதவியாளர் அறையில் இதற்கென வைத்திருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குப் பின்பு கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொண்ட பின்பு மேற்கூறப்பட்ட விலாசத்தில் வைத்துத் திறக்கப்படும். கேள்விப்பத்திரகாரர், கேள்விப்பத்திரங்கள் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாத அல்லது வெளிப்படுத்தாது அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தல் கிடைத்துப் பத்து நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தாதுவிடின், செலுத்தப்பெற்ற கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

8. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர், ஒப்பந்த வேலையைச் சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரசைகளாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வேலையாட்கள் கூடுமானவரை வேலைத் தலத்துக்கு அருகாமையில் இருப்பவர்களாயும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதிக் கோரப்பட்ட தொகையில் ஐந்து வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவர்.

10. இவ்வேலை பற்றிய மேலும் ஏதேனும் தகவல் அறிய விரும்பின் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

11. குற்றப்பட்ட ஒப்பந்தகாரர் பட்டியலிலுள்ளவர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் எவ்வித கேள்விகளுக்கும் இடமின்றி இவ்வறிவித்தலிலுள்ள ஒரு பகுதியையோ அல்லது முழுப் பகுதியையோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளார்.

13. கேள்விப்பத்திரகாரர்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறந்த திகதியிலிருந்து ஒரு மாதகாலம் வரையும் அமுலில் இருப்பதாகக் கருதப்படும்.

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக்கிளை,
செயலகம்,
யாழ்ப்பாணம்,
1973.02.13.

2-932/1—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

காணி ஆணையாளர் திணைக்களம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க்குறிப்பிடும் வேலைகள் செய்வதற்காக 1973.04.06 ம் திகதி பிற்பகல் 1.00 மணிவரை கொழும்பு த. பெ. இல. 500. காணிக் கொமிஷனர் திணைக்களக் கேள்விப்பத்திரச் சபையின் தலைவரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | மிவுத் தொகை தேவைப்படும் ரூபா |
|---|---|
| (i) யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைச்சி காரியாதிகாரி பிரிவுள்ள அடம்பன் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் பாதை அமைத்தல் | 23,000/- |
| (ii) யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவு காரியாதிகாரி பிரிவுள்ள கலாவரை கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் பாதை அமைத்தல். | 21,000/- |

2. மேற்குறிப்பிட்ட தொகைக்கோ அல்லது அதற்குரிய தொகைக்கோ நெடுஞ்சாலைப் பகுதி, நீர்ப்பாசனப் பகுதி, அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் இக்கேள்விக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரி, காணிக் கிளையிலிருந்து 1973 ம் ஆண்டு சித்திரை மாதம் 02 ந் திகதி பிற்பகல் 1.30 மணிவரை வழங்கப்படும். மேற்படி தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்கள் தமது ஒப்பந்தப் பதிவு பற்றிய அத்தாட்சிப் பத்திரங்களை அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. மேற்படி வேலைக்குக் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக செலுத்தப்பெற்ற ரூபா 25 க்குப் பெறுமதியான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படும் பற்றுச்சீட்டு இவ்வறிவித்தல் விளம்பரம் செய்தபின் செலுத்திப் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம், பிணையாகச் செலுத்தும் வைப்புப்பணங்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன. எவ்வாறுயினும் மேற்கூறப்பட்ட சமர்ப்பணத்தைக் கொண்டே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. இரு பிரதிகளைக் கொண்ட கேள்விப்பத்திரம் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் "தலைவர், கேள்விப்பத்திர சபை, காணிக் கொமிஷனர் காரியாலயம், த. பெ. இல. 500 கொழும்பு" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மூடப்பட்டு சீல் வைக்கப்பெற்ற தபால் உறையின் மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதியப்பட்ட தபாலில் அனுப்பாதுவிடின் காலிமுக செயலகக் கட்டிடத்தில் 320 ம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் முடிவு திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ நேரில் கொண்டு சென்று சேர்க்கலாம்.

5. முதலாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்குப் பின்பு கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விப்பத்திரங்கள் மேற்குறிப்பிடப்பட்ட 320 ம் இலக்க அறையில் வைத்து 1973.04.06 ந் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும்.

7. எவராயினும் உடன்படிக்கை செய்யாத அல்லது வெளிப்படுத்தாது அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுகொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தல் கிடைத்துப் பத்து நாட்களுக்குள் அனுமதிக்கப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்தாதுவிடின் செலுத்தப்பெற்ற கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

8. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் ஒப்பந்த வேலையைச் சரிவரச் செய்வதற்கு அமர்த்தப்படும் நுட்ப வேலையாட்கள், மற்றும் பணியாட்கள் யாவரும் இலங்கைப் பிரசைகளாகவே இருத்தல் வேண்டும். அத்தகைய வேலையாட்கள் கூடுமானவரை வேலைத் தலத்திற்கு அருகாமையில் இருப்பவர்களாயும் இருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருடன் ஓர் ஒப்பந்தம் எழுதிக் கோரப்பட்ட தொகையில் ஐந்து வீதத்தைப் பிணைப்பணமாகக் கட்டி ஒப்பந்தம் எழுதப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து கையளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

10. இவ்வேலைகள் பற்றிய மேலும் ஏதேனும் தகவல் அறியவிரும்பின் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

காணிக்கிளை,
செயலகம்,
யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு மாசி மாதம் 13 ந் திகதி

2-932/2—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48.

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973 மார்ச் 13 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை, பின்வரும் வேலைக்கான வேருக பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

விவரணம் :—

ஹொரவப்பத்தானைச் சாலைக்கான இடம்—
அடர்காடு வெட்டல், மட்டமாக்கல், நிரப்பல்.

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப் படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ரூபா 15,000/- தொகைக்குக் குறையாத சிவில் பொறியியல் வேலைகளுக்காக இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக, கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/-க்கான கேள்விப் பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் கேள்விப்பத்திரச் சாதனங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கட்டணமாக ரூபா 25/-க்கான பற்றுச்சீட்டையும் 1973 மார்ச் 12 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன்பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். சான்றுரைகளை பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றுரைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் கேள்விப்பத்திரக் கட்டுப்பணத்தைக் காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு-5.

2-916—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### ஸ்ரீ லங்கா மீன்பிடிக் கூட்டுத்தாபனம்

மோட்டார் வாகனங்களின் விற்பனை

கேள்விச்சபைத் தலைவரால் கீழ்க்குறிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் (பாவித்தவை) கொள்வனவு செய்வதற்கும், அகற்றுவதற்கும் பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகிறது.

கேள்விகள் 1973 பெப்பிரவரி 27 பி. ப. 2.30 மணிக்கு முடிவு பெறும். கேள்விச்சாதனங்கள் 1973 பெப்பிரவரி 26 பி. ப. 2.00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விச்சாதனங்களைத் திருப்பிப்பெறக்கூடிய கேள்விவைப்புப் பணமாக ரூபா 100/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்த மோட்டார் வாகனங்களை மத்துமகலவிலுள்ள ஸ்ரீ லங்கா மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் பார்வையிடலாம். மேலதிக விவரங்கட்கு மத்துமகலவிலுள்ள போக்குவரத்து முகாமையாளருடனும் கீழொப்பமிட்டுள்ளவருடனும் தொடர்பு கொள்ளவும். (தொலைபன்னி இலக்கம் 0782-262, போக்குவரத்து முகாமையாளர், மத்துமகல).

24 ஸ்ரீ 937—இசுசு லொறி.
33 ஸ்ரீ 726—போர்ட் வி8.
33 ஸ்ரீ 1023—போர்ட் வி8.
33 ஸ்ரீ 6032—செவர்லெட் வைக்கிங்—50 லொறி.
33 ஸ்ரீ 6031—செவர்லெட் வைக்கிங்—50 லொறி.
சி. என். 3240—போர்ட் வி8 லொறி.
24 ஸ்ரீ 6545—பென்ஸ் (டீசல்)
குளிர்சாதன பாரவண்டி அடிச்சட்டகம் (இன்ரனசனல் காவெஸ்ரர்) வி8 எஞ்சின்.
33 ஸ்ரீ 6624.

முகாமையாளர்,
வழங்குபொருள்களும்,
இருப்புப் பொருள்களும்.

தொலைபன்னி—22537,
ரொக்கவுஸ் ஒழுங்கை,
த. பெ. இல. 1384,
கொழும்பு 15.

2-912—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்

தலைவர், கேள்விச்சபை, இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், ரொக்கவுஸ் ஒழுங்கை. கொழும்பு 15 அவர்களால், பின்வருவன வழங்குவதற்குப் பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | | தொகை |
|---|---|---|
| (1) | வார்ப்பிரும்பு அச்சுக்கோப்புத் தணலடுப்புத் தட்டுகள் | 05 |
| (2) | வார்ப்பிரும்பு சூட்டடுப்புத் தட்டுகள் .. | 05 |
| (3) | உறைவூட்டி எந்தானங்கள் .. | 06 |
| (4) | கட்டிப் பனிக்கட்டிக் கொள்கலங்கள் .. | 50 |

கீழொப்பமிட்டவரிடமிருந்து திருப்பிப் பெறக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி 27.02.73 பகல் 12 மணி வரை கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 28.2.73 பி. ப. 2.30 மணிக்கு முடிவுபெறும்.

முகாமையாளர்,
வழங்குபொருள்களும், இருப்புப்பொருள்களும்.

ரொக்கவுஸ் ஒழுங்கை,
கொழும்பு 15,
12.02.73.

2-913—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம்

"பாவனைக்குதவாத மோட்டார் வாகனங்களை விற்பனை செய்தல்"

மருதானையிலுள்ள அஞ்சற் தொலைத் தொடர்புப் பண்டகசாலையில், தொலைத் தொடர்புப் பிரிவில் இருக்கும் பாவனைக்குதவாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் விற்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, அ. தொ. தலைமை அலுவலகம், 5-வது மாடியில் உள்ள பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளர் அலுவலகத்தின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1973.03.22 ந் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. 22 ஸ்ரீ 2314
2. 22 ஸ்ரீ 2315
3. 22 ஸ்ரீ 2316
4. 22 ஸ்ரீ 5188
5. 22 ஸ்ரீ 5189
6. 22 ஸ்ரீ 5190
7. 22 ஸ்ரீ 5191
8. ஜசி 3434
9. 4 ஸ்ரீ 9253

2. கொழும்பு 1, அ. தொ. தலைமை அலுவலகக் கட்டிடம், 5 வது மாடி பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட படிவங்களின், இணைப் படியில் கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். அவரிடமிருந்து சகல விபரங்களையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ளவும். மரு

தானை, அஞ்சல் தொலைத் தொடர்புப் பண்டகசாலையிலுள்ள போக்குவரத்து உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு இப் பாவனைக்குதவாத மோட்டார் வாகனங்களைப் பார்வையிடலாம்.

3. கொழும்பு 1, மத்திய தந்தி அலுவலகம் தந்திக் காசாளரிடம் அல்லது எந்த அஞ்சல் அலுவலக அஞ்சல் அதிபரிடம் கேள்விப் பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 50/- கட்டிப் பெற்று பற்றுச்சீட்டினை பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரருக்கே கேள்விப்பத்திர சதானங்கள் 1973.03.19 ந.ப. 12 மணி வரை வழங்கப்படும்.

எச். டி. எஸ். ஏ. குணவர்த்தன,
பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளர்.

5-வது மாடி,
அஞ்சல் தொலைத் தொடர்புத் தலைமை அலுவலகம்,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1.

2-882/1—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம்

பாவனைக்குதவாத களஞ்சியப் பொருட்களின் விற்பனை

பாவனைக்குதவாத களஞ்சியப் பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, கோட்டை, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், 5-வது மாடியிலுள்ள பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளரின் அலுவலகத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 23.03.1973-ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு 1, கோட்டை, அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், பிரதான தொலைத் தொடர்ப்புப் பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட படிவங்களின் இணைப்படியில் கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளரிடமிருந்து முழு விபரங்களையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அவரது அலுவலகத்தில் கேள்விப்பத்திர சாதனங்களையும் பரிசீலனை செய்யலாம்.

3. கொழும்பு 1, மத்திய தந்தி அலுவலகம், தந்திக்காசாளரிடம் அல்லது எந்த அஞ்சல் அலுவலக அஞ்சல் அதிபரிடம் கேள்விப் பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 50/- கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைப் பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரருக்கே கேள்விப்பத்திரச் சாதனங்கள் 20.03.1973 ஆம் திகதி ந. ப. 12.00 மணிவரை வழங்கப்படும்.

எச். டி. எஸ். ஏ. குணவர்த்தன,
பிரதான தொலைத் தொடர்புப்
பொறியியலாளர்.
ஈரிபி(11)32/02.

பிரதான தொலைத் தொடர்புப்
பொறியியலாளர் அலுவலகம்,
அஞ்சல் தொலைத் தொடர்புத்
தலைமை அலுவலகக் கட்டிடம்,
அ. பெ. இல. 503, கொழும்பு 1.

2-882/2—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

இலக்கம் : இயூ. டீ. 80/72.

கேள்விப்பத்திர முடிவுகள்—பொலிசுத் திணைக்களம்

2000 தும்பு மெத்தைகள் வழங்குதல்—முடிவு திகதி 22.12.1972.

1972 டிசம்பர் மாதம் 1 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியால் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமாக 9 கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களால் மொத்தம் 12 விலைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் விபரம் பின்வருமாறு :

55, அவொன்டேல் அவெனியூ,
நயன ஃபர்னிஷிங் ஹவுஸ்,
கொழும்பு-10.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை , தும்பு மெத்தை ஒன்றுக்கு ரூ. 28.00.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிசுத் தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973 பெப்ரவரி மாதம் 10 ம் திகதி.

2.926—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

மாஜிஸ்ரேட் நீதிமன்றம்—மட்டக்களப்பு—பொருட்கள் விற்பனை

உரிமையாளர்களால் கோரப்படாததும் அரசாங்கத்திற்கு உடைமையாக்கப்பட்டுள்ளதுமான கீழ்க்காணப்படும் பொருட்கள் 1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 10 ந் தேதி பி. பகல் 3 மணியளவில் மேற்படி நீதிமன்றத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொருட்களைக் கொள்வனவு செய்வோர், ஏலவிற்பனை முடிவில் அப் பொருட்களை ஏல விற்பனை செய்யப்படுமிடத்தில் நின்றும் உடனே அப்புறப் படுத்தல் வேண்டும்.

| வழக்கு இலக்கம் | | பொருட்களின் விபரம் | | |
|---|---|---|---|---|
| ஏ. 3125 | .. | ரலி துவிச்சக்கர வண்டி | .. | 1 இல. ஜ. பீ. 1397 |
| — | .. | ஷை | .. | 1 இல. 22239 |
| — | .. | ஷை | .. | 1 இல. ஏ. 3040 |
| ஜ. 1455/ஏ.2738 | | துவிச்சக்கரவண்டி பிரேம் | | 1 ஈ.ஜெ. 982 |
| 30532 | .. | பீ. எஸ். ஏ. மிதிவண்டி பிரேம் | | 1 ஜ .பீ. 368 |
| 30532 | .. | ரலி ஷை | .. | 1 ஜ. டபிலப் 447 |
| ஏ.2922/பீ. 541 | | ரலி ஷை | .. | 1 ஈ. எஸ். 283 |
| ஏ. 3231 | .. | மிதிவண்டி பிரேம் | .. | 1 பீ. 387111 |
| ஏ. 3081 | .. | பஸ் ஹோர்ன் | .. | 1 எச். ஏ. 5. (ஏ) 71052550 |

| வழக்கு இலக்கம் | | பொருட்களின் விபரம் | | |
|---|---|---|---|---|
| ஏ. 3144 | .. | நீட்டி மடக்கக் கூடிய 2" நீளக்கத்தி | .. | 1 |
| ஏ. 3168 | .. | நீட்டி மடக்கக் கூடிய 4" நீளக் கத்தி | .. | 1 |
| 37362 | .. | உருக்கு ரங் பெட்டி | .. | 1 |
| 36186 | .. | ஷை | .. | 1 |
| — | .. | ஷை | .. | 2 |
| ஏ. 3507 | .. | பைபர் சூட்கேஸ் | .. | 1 |
| — | .. | ஷை | .. | 1 |
| 38562 | .. | பெற்றோல் மக்ஸ் விளக்கு | | 1 |
| ஏ. 2923/பீ 1792 | | பெரிய குடை | .. | 1 |
| — | .. | கோடரி | .. | 2 |
| — | .. | மன்னவும் காட்டுக்கத்தி | .. | 17 |
| ஏ. 3338 | .. | எக்ஸ் ஹோஸ்ட் | .. | 1 |
| — | .. | ஹூட் கெரியர் | .. | 1 |
| — | .. | டயர் | .. | 1 750-16 |
| 37180 | .. | பார்க்கோ மெண்டல் | .. | 1 |
| 38655 | .. | ஷை | .. | 1 |
| 38796 | .. | 2 டசின் கொண்ட பெட்டி | .. | 1 |

| வழக்கு இலக்கம் | பொருட்களின் விபரம் | |
|---|---|---|
| 38848 | மெண்டல் 56 கொண்ட பெட்டி | 1 |
| 38755 | ராணி சந்தனசோப் துண்டு | 1 |
| 38757 | விக்ஸ் வேபரோப் போத்தல் | 1 |
| — | 1 புசல் அளவுடைய அளவு உபகரணம் | 7 |
| — | சாக்குத் துண்டுக் கட்டு | 1 |

| வழக்கு இலக்கம் | பொருட்களின் விபரம் | |
|---|---|---|
| — | வெற்றுப் போத்தல் | 152 |
| — | கிளாஸ் டம்ளர் | 45 |

கே. சோமசுந்தரம்,
பிரசித்த நீதிமன்ற நிர்வாகச் செயலாளர்,
நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

மாஜிஸ்திரேட் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
29.1.73

2—883—1973.02.23—ந் திகதிய வர்த்தமானி இல. 48

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

**வவுனியா மாவட்டத்தில் கள்ளுத் தவறணை குத்தகை மறு விற்பனை—1.3.73 தொடக்கம் 30.9.73 வரை**

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணைகளில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்டக் கள்ளுத் தவறணைகளில் 1.3.73 தொடக்கம் 30.9.73 வரைக்குமான கால எல்லை வரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்து வரும் பொது விதிகளுக்கமையவும், 31.10.72 ல் பிரசுரிக்கப்பட்ட 31/3 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் காணப்படும் ' கள்ளுத் தவறணைக் குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

2. கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட கள்ளுக் குத்தகை 1973 என்று குறிப்பிட்டு, மாசி மாதம் 26 ந் திகதி கீழே காட்டப்பட்டிருக்கும் நேர அட்டவணைப்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும், எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்ப முடியாது.

4. கேள்விக்காரர்—

(அ) நேர்முகத்தில் சமூகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப் பகுதியில் அவருடைய காணி இருக்கின்றதோ அந்தப் பகுதி. காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில் ;

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையில் 25 விகிதத்திற்குக் குறைந்தால் அவரது கேள்விப்பத்திரம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதே வேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்குக் கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது வவுனியாக் கச்சேரியில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் பொறிக்கப்பட்டு என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் ரூபா 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாகக் கச்சேரிப் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர், தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினால் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

7. கேள்விப்பத்திரங்கள் பெற்றவர்கள், குத்தகை விற்பனையில் பங்குபற்றத் தவறின் தங்கள் வைப்புப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு கேள்விப்பத்திரத்தைத் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

8. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

10. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தை தவறணைக்காகத் தெரிவு செய்திருக்கிறார் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

11. மேற்கொண்டு விபரங்கள் அறிய விரும்பின் வவுனியாக் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகள் விற்பனை—1.3.73—30.9.73

| இலக்கமும் இடமும் | தவறணைகளின் உள்ளூர்ப் பகுதி | விற்பனைத் திகதி | நேரம் |
|---|---|---|---|
| 2. வலயான்மடம் | வலயான்மடம் கிராம எல்லைக்குள் | 26.2.73 | காலை 10.00 |
| 6. அலம்பில் | அலம்பில் கிராம எல்லைக்குள் | 26.2.73 | காலை 10.15 |

எஸ். சிவஞானம்,
மேலதிக அரசாங்க அதிபர்,
வவுனியா அரசாங்க அதிபருக்காக.

வவுனியாக் கச்சேரி,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 9 ந் வ.

2—796—26.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும்: வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** *என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—*குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை 1973**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | 5.1.73 | வெள்ளி | .. | 27.12.72 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 12.1.73 | வெள்ளி | .. | 3.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.1.73 | வெள்ளி | .. | 10.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 26.1.73 | வெள்ளி | .. | 17.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **பெப்புருவரி** | .. | 2.2.73 | வெள்ளி | .. | 24.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.2.73 | வெள்ளி | .. | 31.1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 15.2.73 | வியாழன் | .. | 7.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.2.73 | வெள்ளி | .. | 14.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **மாச்சு** | .. | 2.3.73 | வெள்ளி | .. | 21.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.3.73 | வெள்ளி | .. | 28.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16.3.73 | வெள்ளி | .. | 7.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.3.73 | வெள்ளி | .. | 14.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30.3.73 | வெள்ளி | .. | 21.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **ஏப்பிறில்** | .. | 6.4.73 | வெள்ளி | .. | 28.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | .. | 18.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
**கொழும்பு,**
**1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.**

*ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*